www.tamilarangam.net

வெளியீடு 1

**அன்பார்ந்த தமிழ் மக்களே!**

## அவசியம் — அரசியல் தீர்வு

ஸ்ரீலங்காவில் நடந்த கடந்த தேர்தல் முடிவுகள், சிங்கள மக்களினதும், தமிழ் மக்களினதும் சமாதான வாழ்விற்கான ஏக்கத்தின், எதிர்பாப்பின் வெளிப்பாடே!

போரை நிறுத்தி, சமாதானத்தை முன்னெடுப்போம் என்னும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக்கட்சியும், அதன் ஆதரவுக்கட்சிகளும், சிங்கள, முஸ்லிம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. போரை முடிவிற்கு கொண்டு வரவேண்டுமென்ற ஆதங்கத்தினால்தான், தமிழ் மக்கள், போர் நிறுத்தம் ஏற்பட்டு, விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும் என்று கூறிய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியையும், அதனைச் சார்ந்த கட்சிகளையும் தெரிவு செய்திருக்கிறார்கள்.

எனவே. சிங்கள மக்களினதும், தமிழ் மக்களினதும் தற்போதைய முக்கிய, அடிப்படை அபிலாஷையானது, போர் நிறுத்தப்பட்டு, சமாதானம் ஏற்பட்டு, அமைதியான சூழ்நிலையில், பொருளாதார சுபீட்சத்துடன் வாழவேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இப் போர் நிறுத்தம் நிரந்தரமாக இருப்பதற்கு, தமிழ் மக்களின், நியாயமான அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வு உடனடியாக ஏற்பட்டாக வேண்டும். அப்படி ஏற்படும் அரசியல் தீர்வு, எதிர்காலத்தில், எதுவித சந்தர்பத்திலும், எந்தக் காரணத்திற்காகவும், அரசியல் களத்தில் மறுபடியும் பந்தாடப்பட்டு, முறியடிக்க முடியாதவாறு, அரசியல் யாப்பில் இணைக்கப்படவேண்டும். அதற்கு, ஒரு சர்வதேச நாடோ, அமைப்போ உத்தரவாதம் வழங்க வேண்டும். இவைதான், தமிழர்களின், இன்றைய உடனடித் தேவை.

புதிய தேர்தல் ஏற்பட்டு, சிங்கள, தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றம் சென்று, இரு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. தமிழ் தேசிய இனப் பிரச்னை நீங்க, அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாமல், பொருளாதரத் தடை நீக்கம், புலிகள் மீதான தடை நீக்கம் ஆகியவற்றைப்பற்றியே பேச்சுக்கள், விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

பொருளாதரத்தடை. புலிகளின் மீதான தடை என்பவையெல்லாம் ஏற்பட்டதின் அடிப்படைக் காரணமே, காலாகாலமாக இலங்கையின் இனப்பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வு இல்லாமைதானே! — ஓர் அரசியல் தீர்வு ஏற்பட்டுவிட்டால், பொருளாதாரத் தடை, புலிகளின் மீதான தடை ஆகியவை யாவும் தானாகவே நீங்கி விடும். அரசியல் தீர்வு இன்றியமையாதது — மையமானது! இந்த மையப் பிரச்னை தீர்ந்து விட்டால், மற்றப் பிரச்னைகளும் தானாகவே தீர்ந்து விடும்!

எனவே, மையப் பிரச்னையல்லாத வெறும் சார்ந்த பிரச்னைகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையே முன் வைத்து, பேச்சுக்களையும், விவாதத்தையும், நேரத்தையும் இழுத்தடித்தால், அரசியல் தீர்வு கண்டு இனப் பிரச்னைக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பாத சில அரஜாக சக்திகள் தலையெடுக்கத் துணை போனவர்களாகி விடுவோம்.

www.tamilarangam.net

தமிழர்களின் போராட்டத்திற்கு அடிப்படைக் காரணம், அரசாங்கம் பொருளாதாரத் தடை விதித்ததோ அல்லது புலிகள் இயக்கத்தைத் தடை செய்ததோ அல்ல. இவைகளெல்லாம் போராட்டத்தின் விளைவுகளே அன்றி, காரணிகளல்ல. விளைவுகளுக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுத்து, அவ் விளைவுகளை நீக்குவதே எமது போராட்டம் என்ற நிலைக்குத் தள்ளப்படுவது, இந்த விளைவுகளின் காரணிகளை நீக்குவதுதான் எமது போராட்டத்தின் நோக்கம் என்பதை மழுங்கடித்து விடும்.

இந்த விளைவுகள் ஓரளவு நீக்கப்பட்டவுடன், ஒரு அரசியல் தீர்வை அரசாங்கம் அமுலாக்கிவிட்டது போன்ற பிரமை, மாயத்தோற்றம் ஏற்படும்.

அதுமட்டுமல்லாது, இந்த விளைவுகளின் நீக்கம் பற்றியே பேசிக்கொண்டும், விவாதித்துக்கொண்டும், காலத்தைத் இழுத்தடித்துக்கொண்டு இருப்போமானால், அரசியல் தீர்வை விரும்பாத, மக்கள் நலன் விரும்பாத, சுயநலமே நோக்கமாகக்கொண்டு இயங்கும், சில அரசியல் கட்சிகளுக்கும், இராணுவத்தினருக்கும், அழிவு சக்திகளுக்குந்தான் நாம் இடம் கொடுத்தவர்களாகி விடுவோம். காலம் சிறிது தாழ்த்தினாலும், இத்தகைய சக்திகள், மெல்ல மெல்லமாக, சிறிது சிறிதாக, தலை காட்டி, சாக்குப் போக்குகள் கூறி, ஒரு அரசியல் தீர்வு ஏற்படாதிருப்பதற்கு வழி வகைகள் செய்து கொண்டேயிருப்பார்கள். பின் என்ன? — மீண்டும் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைதான்!

ஒரு முக்கிய கோரிக்கையாக, புலிகளின் மீதான தடை நீக்கம் தற்போது வைக்கப்படுகிறது. இக் கோரிக்கைக்குக் காரணமாக, ஒரு பயங்கரவாத இயக்கமாகக் கருதப்படும் அமைப்பு, பேச்சு வார்த்தைகளில் எப்படி கலந்து கொள்ள முடியும் என்ற வாதம் முன் வைக்கப்படுகிறது. வெறும் உணர்ச்சி பூர்வமாகப் பார்க்காமல், அறிவு பூர்வமாக இதனைப் பார்ப்போமானால், புலிகளுடன் பேச வேண்டும் என அரசாங்கமும், சிங்கள கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருப்பதே, புலிகளுக்குக் கிடைத்த அங்கீகாரந்தானே!. இந்த நிலையை ஏற்றுக்கொள்ளாமல், புலிகள் மீதான தடை நீக்கத்திற்குப் பின்னர்தான் அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்ற நிலைப்பாடு, அதற்கான பேச்சு வார்த்தைகள் , வீணாக, அனாவசியமாக, பிற்போடப்பட்டுக் கொண்டேயிருப்பதற்கு ஒரு சாக்காக அமைந்து விடும் என்பது நிதர்சனம்.

தமிழர்களின், உண்மையான அரசியல் தீர்வுக்கும், சுபீட்சத்திற்கும், விமோசனத்திற்கும், விரைவாகத் தீர்மானம் ஏற்பட்டு நாட்டில் சமாதானமும், ஜனநாயகமும், பொருளாதார சுபீட்சமும் நிலவ வேண்டுமானால், தமிழ் மக்கள் தற்போது எடுக்கவேண்டிய நிலைப்பாடு, அரசாங்கத்தின் முன் வைக்கவேண்டிய கோரிக்கை என நாங்கள் கருதுவது இதுதான் —

> பல தசாப்தங்களாக, ஸ்ரீலங்கா அரசாங்கங்கள், தமிழர்களின் நியாயமான உரிமைகளை மறுத்து, அவர்களை அடக்கி ஒடுக்குவதையே, கொள்கையாகக் கொண்டு இயங்கி வந்தன. இதற்கு எதிராக நடாத்தப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள், அரசாங்கங்களால் புறக்கணிக்கப்பட்டதால், தமிழ் ஈழந்தான் தீர்வு என்ற கோட்பாட்டின் அடிப்படையில், ஆயுதப் போராட்டமாக வெடித்தது. எத்தனையோ உயிர்களின் அழிவிற்கும், உடைமைகளின் சேதங்களுக்கும், சமூகச் சீரழிவுகளுக்கும், அநியாயங்களுக்கும் தமிழர்கள் ஆளாக்கப்பட்டனர். மாற்றுத்தீர்வினை ஏற்றுக்கொள்ள தமிழர்கள் தயாராக உள்ளனர். ஸ்ரீலங்கா அரசின், ஈழத்திற்கு மாற்றான தீர்வு என்ன? — அதைப்பற்றிப் பேசுவோம். இதற்கு ஒரு முடிவு, தீர்வு கண்டால், மற்றைய பிரச்னைகள் இல்லாது போகும். பல வருடங்களாக, தமிழ் தேசிய பிரச்னைக்குத் தீர்வு காணாததால், ஸ்ரீலங்கா

www.tamilarangam.net

தொடர்ச்சியான பொருளாதார, சமூகச் சீரழிவுகளுக்கு உள்ளாகிவிட்டது உண்மை. இந்நிலையை உணர்ந்து, மக்களின் நலனை, நாட்டின் சுபீட்சத்தை மனதிற்கொண்டு, அரசியல் தீர்வுக்கான உங்கள் திட்டத்தை உடனடியாக முன் வையுங்கள் — அதனைப்பற்றிப் பேசி, தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான, ஒரு நியாயமான அரசியல் தீர்வு கண்டால், சிங்கள இனமும் தமிழ் இனமும், ஒருங்கிணைந்து இந்நாட்டில் வாழ முடியும் — அப்பொழுதுதான் இந்த நாடு முன்னேறும் — வளம் பெறும்.

— இதுவே தமிழ்பேசும் மக்களின் கோரிக்கையாகும். நாம் சுய சிந்தனை உள்ளவர்களானால், சீரழிந்து, சிதைந்துபோன தமிழ்ச்சமூகத்தை, மறுபடியும் விரைவில் நிர்மாணிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் திரிகரணசுத்தி உள்ளவர்களானால், இந்த நிலைப்பாட்டையே நாம் உடனடியாக எடுத்தாக வேண்டும்.

அதைவிட்டு, தடை நீக்கங்ள் பற்றியே(அவை எதுவாயினும்) நாம் கோரிக்கைகள் வைத்து, காலத்தையும். சந்தர்ப்பங்களையும் விரயமாக்கினோமானால், அதற்கு உடந்தையாக இருப்போமானால். அழிவு சக்திகள் தலை தூக்க, தங்களைப் பலப்படுத்த, அடிகோலியவர்களாகிவிடுவோம். மறுபடியும் போர் மூள்வதற்கு வித்திட்டவர்களாகி விடுவோம். தொடர்ந்தும், மேன்மேலும், உயிர்களின், உடைமைகளின் சீரழிவிற்கும், சமூகச் சீர்கேட்டிற்கும் காரணகர்த்தாக்களாகிவிடுவோம். வருங்காலச் சமுதாயத்திற்கு நாம் பாரிய, நீக்கமுடியாத, தீங்கிழைத்தவர்களாகி விடுவோம். மன்னிக்கப்படமாட்டோம்.

இப்பொழுதும் இந்த யதார்த்தைப் புரிய மறுத்து, வாய்மூடி மௌனிகளாகவோ. வெறும் ஊதுகுழல்களாகவோ, கிளிப்பிள்ளைகளாகவோ இருப்போமானால், தடை நீக்கங்கள் பற்றிப் பேசியே காலத்தையும், சந்தர்ப்பங்களையும் வீணடிக்க விடுவோமாயின், அரசியல் தீர்வு என்பது எட்டாக்கனியாகவே இருந்து கொண்டேயிருக்கும். இதன் விளைவாக, தமிழர்களின் உயிர், உடைமை, பொருளாதார, சமூக சீரழிவுகள் மேலும் தொடர்வது திண்ணம்.

இந் நிலைமை ஏற்படாதிருக்கவேண்டுமாயின், தமிழர் நலனில் உண்மையாகவே அக்கறை கொண்ட அனைவரும், தங்களாலான அழுத்தங்களை சம்பந்தப்பட்ட தமிழ், சிங்கள அரசியல் கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும், வேறு விஷயங்களில் காலத்தையும், சந்தர்ப்பத்தையும் விரயமாக்காது, அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய உந்துதல்களைக் கொடுக்க ஆவன செய்யவேண்டும் எனப் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

Tamil Progressive Movement
B.M. BOX NO: 1738
LONDON WC1X 3NN
U.K.

21 FEB. 2002



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்